# 'மாநாடு எமக்குப் பெருமைதேடித்தந்துள்ளது

விலைரூபா 1-00 ★


பயிற்சி
அதிக அறிமுறை தொழில் முறையுடன் அமைந்த
★ வெல்டிங்
★ மோட்டார் இயந்திரவியல்
பயிற்சி வகுப்புக்கள் (24-4-82) ஆரம்பம்.
சி. ஈ. ரி.
ஐலன்ட் இன்ஸ்ரிரியூட்
(விகாரைக்கு சமீபமாக)
58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[2913]



ஈழநாடு
THE EELANADU

மலர் 24 சித்திரை 10 ஜ. ஆகிர் 28 இதழ் 69

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23—4—82


## அமைச்சர் இராசு பெருமிதம்

(கொழும்பு)

'உலகின் முக்கிய சமயங்கள் யாவும் ஆசியாவிலேயே தோன்றியுள்ளதால், அனைத்து உலக இந்து மாநாடும் இலங்கையில் நடைபெறுவது பொருத்தமானதாகும்.'

மேற்கண்டவாறு பிராந்திய அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள், தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரை உலக இந்துமாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியை பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பித்துவைத்து உரையாற்று

(8ம் பக்கம் பார்க்க)

# வடபகுதி பாரிய திட்டத்துக்கு மே.ஜெர்மன் உதவியளிக்கும்!

## யாழ். மாநகர வரவேற்பில் மே. ஜெர்மன்தூதுவர்தகவல்

(யாழ்ப்பாணம்)

''மேற்கு ஜெர்மன் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் உதவியில் ஒரு பகுதியை, வடபகுதியின் பாரிய அபிவிருத்தித் திட்டமொன்றுக்கு பிரித்து வழங்குவதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அமைந்த ஒரு தீர்மானம் சில தினங்களுக்கு முன்னர் பொன்நகரில் எடுக்கப்பட்டது. இந்த விபரத்தை இங்கு வெளியிடுவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு யாழ். விஜயம்செய்த மேற்கு ஜெர்மன் தூதுவர் திரு. ஜெர்ஹாட் திறிசருக்கு யாழ். மாநகரசபை அளித்த வரவேற்பில், மே. ஜெர்மன் தூதுவர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இவ் வைபவத்திற்கு யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமை வகித்தார். எதிர்க்கட்சித்தலைவர் திரு, அ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உட்பட யாழ். மாநகர சபையின் கூட்டணி உறுப்பினர்களும் திருமதி அந்தோனியா சுவாமி நாதனும் கலந்து கொண்டார். திரு. ஜெர்ஹர்ட் திறிசர் தொடர்ந்து உரையாற்றுகையில் உங்கள் பிரச்னைகள் பற்றி எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் என்னைப் பலதடவைகள் சந்தித்து விளக்கியிருந்தார். உங்கள் பிரச்னைகள் சம்பந்தமாக எனது தூதரகத்தில் என்னை வந்து எப்போதும் சந்திக்கலாம். உங்கள் அன்பையும் பாசத்தையும் எப்போதும் மறக்கமாட்டேன்'' என்றார்.

நகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் உரையாற்றுகையில் மேற்குஜெர்மன் மக்களின்

(8ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் இராசு வருத்தம் தெரிவித்தார்

(கொழும்பு)

அகில உலக இந்து மகாநாட்டில் ஏற்பட்ட சில தவறுகள், அசௌகரியங்கள் குறித்து அமைச்சர் இராசதுரை நேற்று வருத்தம் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாப

(8ம் பக்கம் பார்க்க)

## 'மாலினிநஞ்சுஅருந்தியதாக சிவகுமார் கூறவில்லை'

### டாக்டர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''மாலினி நஞ்சு அருந்திவிட்டார் என்று ஆரம்பத்தில் சிவகுமார் என்னிடம் கூறவில்லை. நான் பரிசோதனை செய்தேன். நாடித்துடிப்பு, கண்பாவை, தசைத்துடி

(8ம் பக்கம் பார்க்க)

## ★ மாலினி மர்ம மரணம்:

# சிவகுமாருக்கு றிமாண்ட் விசாரணை இன்று தொடரும்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் மாலினி மகேந்திரன் மர்ம மரணம் தொடர்பாக நடந்த மரண விசாரணையில் சாட்சியமளித்த பிராந்திய முகாமையாளர் செல்லத்துரை சிவகுமாரை நேற்று விசாரணை முடிவில் றிமாண்டில் வைக்குமாறு யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் உத்தரவிட்டார்.

ஆனையிறவிலுள்ள உப்புக் கூட்டுத்தாபன விடுதியில் மாலினி மகேந்திரன் வீட்டில் தங்கியிருந்த சிவகுமார் நேற்று இரண்டாவது தினமாக சாட்சியமளித்தார்.

நேற்று சிவகுமார் சுமார் 5 மணி நேரம் சாட்சியமளித்தார்.

இறந்த மாலினியின் கணவரான உப்புக் கூட்டுத்தாபன கணக்காளர் மகேந்திரன், ஆனையிறவு புகையிரத நிலைய அதிபர் த. நாகநாதன் உப்புக்

(8ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் இம்சிக்கப்பட்டதாக புகார்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினமிரவு தொல்புரத்திலுள்ள பாணுவெட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையடுத்து, இளைஞர்களும், பொதுமக்களும் துன்புறுத்தப்பட்டதாகவும், இம்சிக்கப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ, அமிர்தலிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

பலவீடுகளில்சோதனை நடந்ததாகவும் காரணமின்றி பொதுமக்கள் தாக்கப்பட்டதாகவும் திரு அமிர்தலிங்கத்திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.


நாளை யாழ்.நகரில்!
மகத்தான திறப்பு விழா
பிரவுண்சன் ரேட் சென்ரர்
(கே. கே. எஸ். வீதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்)
★ டெலிவிஷன் ★ வானொலிப்பெட்டி ★ எவர்சில்வர் பொருட்கள்
★ மின் இயக்கச் சாதனங்கள் விற்பனைக்களஞ்சியத்தை
யாழ்.நகர முதல்வர் உயர்திரு இராசா விசுவநாதன் அவர்கள்
காலை 10 மணிக்குத் திறந்துவைக்கும் நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்க அன்புகொண்டு அழைக்கின்றோம். வருக!
(2917)

மணிவாக்கு

முகம்மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால் மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

— வள்ளுவர்

# நமது நோக்கு

## இருப்பதும் இல்லாததும்!

வேற்று மதங்களில் காணப்படும் நல்லவைகளை— உடன்பாட்டுக்குரியவைகளை ஏற்றுக் கொள்வதும் தனக்குள் ஜீரணித்து விடுவதும் இந்துசமயப் பண்புகளில் ஒன்றாகும். இது வெறும் சம்பிரதாயச் சடங்குகளை மாத்திரம் கொண்டதாகவன்றி அதுவே ஒரு வாழ்க்கை முறைமையாகவும் திகழ்கின்றது.

உலக நாகரிகங்களின் ஊற்றுக்கண்ணாகக் கருதப்படும் பாரத தேசத்தில் காலத்துக்குக் காலம் பல்வேறு புதிய சமயச்சிந்தனைகள் வெடித்து முகிழ்த்த போதிலும் அவை அடிப்படையில் இந்துமதத்தின் சாரத்திலேயே மூழ்கிப் போன வரலாறுகள் உண்டு.

அகிலஉலக இந்துமாநாடு கொழும்பு மாநகரில் மிகக் கோலாகலமாகஆரம்பமாகி நடைபெற்றுவரும் செய்திகளை அறியும்போது நமக்கு மேற்கண்டவாறு சிந்தனைகள் ஓடுவது வியப்பொன்றுமில்லை.

இந்துமதத்தின் பெருமை அதன்அதிசயக்கத்தக்கசகிப்புத் தன்மையிலேயே பெரிதும் தங்கியுள்ளதென்ற பெரியோர் கருத்து இன்றைய நிலையில் நம்மை மேலும் சிந்திக்க வைக்கின்றது.

கொழும்பில்நடைபெறும் மாநாடு ஒரு ஆராய்ச்சி மாநாடாகக் கொள்ளமுடியாது. அவ்வாறாயின் அதற்கு சாதுக்களும், சந்நியாசிகளும், கலைஞர்களும் அதிக அளவில் வருகை தரவேண்டிய அவசியமிருக்காது. இந்து மதத்தைப் பற்றி ஆராய்வதாயின் அதற்கு கொழும்பு நகரம் பொருத்தமானஇடமென்று கருதுவதும் ஏற்கக்கூடியதன்று.

இந்த நாட்டில் இந்து சமய விவகாரங்களுக்கென ஒரு அமைச்சு உருவாக்கப்பட்டு அதற்கு திரு. செ. இராசதுரை பொறுப்பாக அமர்த்தப்பட்டுள்ளார். அவர் அரசாங்கத்துடன் இணைவதற்கு முன்னர் இப்படி ஒரு அமைச்சை உருவாக்குவது பற்றி அரசு எண்ணிக் கூட பார்த்திருக்குமா என்பது சந்தேகமே. அந்த வகையில் திரு.இராசதுரை பாராட்டுக்குரியவர்.

தாம் பொறுப்பேற்ற அமைச்சின் சார்பில் நல்லதொருகாரியத்தைநிகழ்த்தி தன்சமயத்துக்குப் பெருமை தேட அமைச்சர் முன்வந்ததும் மகிழ்ச்சிக்குரியதே.

அமைச்சரின் பொறுப்பில் வேறு (சமயசார்பற்ற) பணிகளும்ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பது இங்கு நினைவு கூர்வது பொருத்தம்.

யாகபூசைகள், யானைகள் மீது திருமுறைகள் ஊர்வலம் போன்ற மாநாடு தொடர்பாக ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாமே சிறப்பாகநடைபெற்றுள்ளன. இவை பற்றிய விபரங்கள் பத்திரிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிலும் கலகலப்பாக வெளியிடப்பட்டுவருகின்றன. கொழும்புக்குச் செல்லமுடியாமற் போனவர்களுக்கு இது உதவியாய் இருக்கும்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்இந்துமாநாட்டை ஆரம்பித்து வைக்க வருகைதந்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா தம்பதிகளுக்கு இந்து கலாசார அமைச்சர் திரு. செ.இராசதுரை தம்பதிகள் பச்சை நிறத்திலான பொன்னாடைகளைப்போர்த்திக்கௌரவித்ததாகச் செய்தி கூறுகிறது.

யானை ஊர்வலமும், பச்சை சாத்தலும் ஐ. தே. கட்சியின் சின்னங்களை நினைவுபடுத்தினாலும் அரசியலுக்கும் இந்து மாநாட்டுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லையென்றே நாம் கருதுகின்றோம்.

மாநாட்டினை ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்திய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் இந்து சமய ஆராய்ச்சி நிலையமொன்றை இலங்கையில் நிறுவவேண்டும் என்ற மாநாட்டின் நோக்கத்தினை வெகுவாக சிலாகித்துப்பேசி இருக்கின்றார். இந்த நிலையம் அமைக்கப்படுவதற்கு இலங்கை அரசு உதவி புரிய ஆயத்தமாக இருக்கின்றது என்று உறுதி மொழியையும் வழங்கியுள்ளார்.

இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு வருவது பற்றியும் சமயங்களுக்கு அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புப்பற்றியும் ஜனாதிபதி எடுத்து விளக்கியிருக்கிறார்.

இந்துசமயஆராய்ச்சிநிலையம்அமைக்கப்படும் பட்சத்தில் அதற்குஅரசின்ஆதரவு மாத்திரமல்ல, அது நிரந்தரமாக செயல்படுவதற்கான பாதுகாப்பும் கூட இருக்க வேண்டும் என நாம் இங்கு வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் அரசியல் சாசனத்தில் என்னதான் உரிமைகளும், பாதுகாப்புகளும் வழங்கப்பட்டிருந்தாலும் அவை பெரும்பாலும் நடை முறையில் பேணப்படுவதில் சங்கடங்கள் இருந்தே வருகின்றன.

இந்து – பௌத்த சமய சௌஜன்யத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கதிர்காமத்திலேயே இந்து யாத்திரிகர்களின் விடுதி அமைப்பதில்சிக்கல் இருந்து வருகின்றது. இந்து சமய நூல்களை ஏராளமாகக் கொண்டு விளங்கிய மிக சிறந்த நூல்நிலையம் அண்மைக்காலத்தில் யாழ். நகரில் கொளுத்தி நாசமாக்கப்பட்டது. ஆங்காங்கே இந்துக் கோயில்கள் மீது அநாகரிகமான அபச்சாரக் கைங்கரியங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன

இவைகளுக்கு அரசுதான் காரணம் என்பதல்ல அரசின் நன்நோக்கம் செயல்படுவதில் உள்ள சிரமத்தையே சுட்டிக்காட்டுகின்றோம்.

எனவே ஜனாதிபதி அவர்கள் மாநாட்டில் எடுத்து விளக்கிய சமய சன்மார்க்க ஒருமைப்பாட்டு தத்துவங்கள் நடைமுறையில் பலனளிக்கவேண்டும்.

இல்லாததை உருவாக்குவதைவிட இருப்பதைப் பேணிக்கொள்வதேசிறப்பு. அதையே இந்த நாட்டின் இந்து மதத்தவர்கள் அரசிடம் எதிர்பார்க்கிறார்கள்.

# "கோரிக்கைகளைக் கவனிக்க அரசு முன்வந்துள்ளது"

## அபிவிருத்தி சபைத் தலைவர் கூறுகிறார்

[பண்டத்தரிப்பு]

"எமது மாவட்டத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கு வேண்டிய பல ஆலோசனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைய சூழ்நிலையில் அரசாங்கம் எமது கோரிக்கைகளை உதாசீனப்படுத்தாது கவனிக்க முன்வந்துள்ளது. நாம் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும். இதை நாம் நன்கு பயன்படுத்த எந்த துறையில் முன்னேற்றம் காணமுடியுமோ அவற்றில் முன்னேற்றம் காண முயற்சிக்கவேண்டும்".

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ்.நடராசா வட்டுக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற ஜனாதிபதி ஊக்குவிப்பு நிதியை உறுப்பினர்களுக்குக் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவரும், உதவி அரசாங்க அதிபருமான திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற இவ் வைபவத்தில் சங்கம் பெருந்தொகையான கடலட்டைகளை வெளிநாடுகளுக்கு கடந்த ஆண்டில் ஏற்றுமதி செய்ததற்காக ஜனாதிபதி விருதாக வழங்கப்பட்ட ஊக்குவிப்பு நிதியான 3லட்சத்து 93 ஆயிரம் ரூபாவை பங்கீடு செய்து சங்கத்திற்கு கடலட்டைகளை வினியோகம் செய்த உறுப்பினர்களுக்குக் கையளிக்கப்பட்டது.

திரு. நடராசா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:- "இவ்வளவு பெருந்தொகையான ஊக்குவிப்பு நிதியை அன்பளிப்பாக இச்சங்கம் பெற்றமைக்காக யாழ் மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் அத்தனைபேரும் பெருமையடைய வேண்டும். வெளிநாட்டு வியாபாரம் செய்யும் கலை முன்பு செட்டிமார்களிடமும் முஸ்லீம்களிடமுமே அதிகம் இருந்து வந்தது என்று கருதப்பட்டது. இப்போது கடற்றொழிலாளர் தங்களது கடும் உழைப்பினால் இச்சங்கம் மூலம் இதனைசாதித்துவிட்டனர். கடலட்டைகளை ஏற்றுமதி செய்யும் பணியில் இச்சங்கம் மேலும் உற்சாகமாக ஈடுபட்டு முன்னேற்றம் காணவேண்டும் என்று வாழ்த்துகின்றேன். சங்கமுயற்சிகளுக்கு எமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி உதவ ஆயத்தமாக இருக்கிறோம்"

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இச்சங்கம் மிகவும் திறமையாக இயங்கி ஜனாதிபதியின் விருதாக பெருந்தொகையைப் பெற்றது எமது மாவட்ட அபிவிருத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை யென்றே கூற வேண்டும். எமது யாழ்மாவட்டத்தில் உள்ளகடல்வளங்களை நாம் நன்கு பயன்படுத்தினால் பொருளாதாரத் துறையில் மேலும் முன்னேற்றமடையலாம். கடலட்டை, சங்கு ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து அதிகளவுஅந்நிய செலாவணியை எமக்குப் பெற்றுத்தந்தமைக்காக சங்க நிர்வாகத்தினரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இச்சங்கம் எதிர்காலத்திலும் தொடர்ந்து பல சாதனைகளை நிலைநாட்டி பொருளாதாரத் துறையில் எமது மாவட்டத்தை அபிவிருத்தியடையச் செய்யும் பணியில் ஈடுபட வேண்டும்.

மக்கள் வங்கி யாழ்ப்பாண பிரதேச முகாமையாளர் திரு எஸ். ஆனந்தன் பேசுகையில்: "வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து எமது பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கும் ஏற்றுமதியாளருக்கு மற்றைய வங்கிகளைவிட எமது மக்கள் வங்கியே பெருமளவு கடனுதவிகளை செய்து வருகின்றது. இந்த சங்கத்தின் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு கடந்த ஒன்றரை வருடங்களில் எழுபது இலட்சம் ரூபாவை கடனாக வழங்கி உதவியுள்ளோம். இச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் சாதனைக்கும் ஒருவகையில் உதவியிருக்கின்றோம் என்ற வகையில் நாமும் இச் சங்கத்திற்கு ஜனாதிபதியின் ஊக்குவிப்பு நிதி கிடைத்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம் என்றார்.

வட்டுக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப்பொது முகாமையாளர் திரு எஸ். சண்முக

(7-ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீ காமாட்சி அம்மன் கொடியேற்றம் இன்று

- இளஞ்சைவப் புலவர் இரா.ஸ்ரீதரன் -

முன்னை வினை தீர்க்கும் வண்ணை காமாஷி அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயம் மிகப் பெருமை வாய்ந்ததொன்றாகும். சரித்திரப்பெருமை வாய்ந்த ஆலயமான இங்குஅன்னை காமாஷித்தாய் வழிபடும் அடியார்களுக்கு அருளைஅள்ளி வழங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றாள். ஸ்ரீ காமாஷி அம்பாள் ஆலய நாச்சிமார்கோயில் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் 6–5–82 வியாழக்கிழமை ரதோற்சவமும் மறுநாள் 7–5–82 வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவமும் நிகழஇருக்கின்றன.

இவ்வாலயம் தொடர்பாக பூர்வீகக்கதை ஒன்று நிலவி வருகின்றது. கர்ண பரம்பரையாக விளங்கும் இக்கதை ஆலய அம்பிகையின் முன்னைய சரித்திரப்பெருமையை எடுத்தியம்புகின்றது. வயதுபோன மூதாட்டி ஒருவர் இவ்வம்பாள் இருந்த ஆலயத்துக்கு அண்மையில் நின்ற நாவல் மரத்தடியில் சிறுநீர் கழித்ததாகவும் அதனால் சீற்றமுற்ற தெய்வம் அம்மூதாட்டியின் முலைகளைத் திருகி எடுத்து விட்டதாம். அதனால் பயந்த அக்கிழவி அன்று முதல் தேவதையின் திருவுருவம் ஒன்றை வைத்து வழிபட்டு அருள் பெற்றதாகவும் கூறப்படுகின்றன. அதனால் "முலைதிருகி நாச்சியார்" என்ற நாமமும் இலங்கியது. பின்பு மூத்தோர் பலர் சேர்ந்து அம்பிகை குடியிருக்க ஒரு அழகிய ஆலயத்தை அமைத்தனர் இவ்வாலயத்தல விருட்சம் மருதாகும். அன்புடன் கைதொழும் அடியார்களுக்கு அல்லலல் நீக்கி அருளை அள்ளிவழங்கும் அன்னை காமாட்சி விழா நாட்களில் திவ்விய திருக்கோலத்துடன் காட்சியளிப்பாள்.

குறிப்பாக இவ்வாலயத்திலே பௌர்ணமி தோறும் நடைபெறும் சுமங்கலிகளுக்குரிய திருவிளக்குப் பூஜை சிறப்புவாய்ந்த அம்சமாகும். கன்னிப்பெண்களும் கலியாணமான பெண்களும் குத்து விளக்குகளை ஏற்றிவைத்து

(8ம் பக்கம் பார்க்க)

# பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

பற்றிமாகரன்

தமிழ்த் தேசிய வாதத்தின் இலக்கிய வெளிப்பாடாக எழுந்த மனோன்மணியம் காப்பியத்தை இயற்றிய பேராசிரியர் பீ. சுந்தரம்பிள்ளையின் 91வது நினைவுதினம் இன்று நினைவுகூரப்படுகிறது மனோன்மணியம் வெறும் இலக்கிய கற்பனையாக மட்டும் அமையவில்லை. தமிழ்த்தேசியவாதமெனும் உணர்வை தூண்டி "திராவிட இயக்கங்களுக்கு வழி காட்டிய ஒரு நடைமுறை சக்தியாகவும்காணப்படுகிறது.

கால்டுவெல் போப் ஐயர் 1830ல்திராவிடர் ஒரு தனி இனம் எனும் அறிவியல் உண்மையை எடுத்துக் கூறிய தன் தொடர்ச்சியாக திருவனந்தபுரத்தில் தத்துவபேராசிரியராக இருந்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அதற்கு ஒரு இலக்கிய வடிவம் கொடுத்தார். இதற்கு அவர் அனுபவித்த தமிழ் எதிர்ப்புச் சூழ்நிலைகளும் ஒரு தூண்டுதலாக இருந்தன. தமிழ் அன்னையை தெய்வமாகப்போற்றிப் பாயிரச்செய்யுள் பாடப்பட்ட முதல் தமிழ் இலக்கியமும் இதுவே "அந்தணர் வளர்க்கும் செந்தீ தண்ணிலும் நாட்டபிமானம் உள்மூட்டிய சினத்தீ அன்றோ வாணவர் விரும்புவது" எனும் கூற்று மனோன்மணிய ஆசிரியரின் மனவெளிப்பாட்டைபுரியவைக்கும் எழுத்துவரிகள்,

தமிழ்த்தேசிய வாதத்தின் வளர்ச்சிக்கு பக்கத்துணையாக தமிழர் பெரும்பான்மையாகப் பின்பற்றும் சைவமதத்தின் சித்தாந்தக்கருத்துக்களை மையப்படுத்தி பாத்திர வார்ப்புச் செய்ததன் மூலம் சைவமும் தமிழும் தழைத்தோங்க ஆசிரியர் இலக்கிய வித்திடுகிறார்.

பேராசிரியர் கான்ஸ் கான் "மக்களுடைய உயர்ந்த பணிகளை தேசிய அரசுக்கு பெறுதல் எனும் மனஉணர்வே தேசியவாதம் என்றார் இது கிட்னி எல்லூரயின் கூறுவது போல் ஆசியாவெங்கும் வர்க்க உணர்வுகளாலும் இனப்பகைமைகளாலும் சூழப்பட்டு அந்நிய ஆட்சிக்கெதிரான வெளிப்பாடாகவே தோன்றியது. அத்துடன் இவ் உணர்வு மிசனறிமாருக்கு எதிரான நடவடிக்கையாக இலங்கை இந்தியாவில் ஆரம்பமாகியது. இப் பொதுப் பண்புகளை மனோன்மணியம் வெளிப்படுத்தி நிற்பதால் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை "தமிழ்த்தேசிய வாதத்தின்" இலங்கிய தந்தையாகி திராவிட இயக்கங்கள் தோன்றஅறிவியல் பாதை காட்டிய பெருந்தகையாகப் போற்றப்படுகிறார்.

# போக்லண்ட்தீவை நெருங்கும் பிரி. போர்க்கப்பல்!

# யுத்தத்தில் பிரிட்டன் முதலில் இறங்காதாம்!

வாஷிங்டன். ஏப். 22

பிரிட்டிஷ் கடற்படையினர் ஆர்ஜென்டீனாவின் 707 யுத்த விமானமொன்றை முதல் தடவையாக நேற்று எதிர்நோக்கினர்.

கடற்படை விமானத்தளத்திலிருந்து எழுந்து சென்ற பிரிட்டிஷ் யுத்தவிமானம், ஆர்ஜென்டீனா விமானத்தை இடைநிறுத்தியது. ஆனாலும் விமானத்தை சுட்டுவீழ்த்துவதற்கான உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை

பிரிட்டிஷ் கடற்படைக் காப்டன் றியல் அட்மிருல் ஆட்வூட், ''நாம் முதலில் யுத்தத்தில் இறங்க மாட்டோம்'' என்று தெரிவித்தார்.

ஆர்ஜென்டீனாவின் சமாதான யோசனைகள் பற்றி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர், அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார். இந்த சமாதான யோசனைகள்திருப்திகரமற்றதென்று திருமதி தட்சர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. அலெக்ஸாண்டர் ஹெய்க்கை சந்தித்து பேசுவதற்கு வாஷிங்டன் செல்லவிருக்கிறார்.

இதே சமயம் ஆர்ஜென்டீனா ஜனாதிபதி நாளை போக்லண்ட் தீவுகளுக்கு செல்லலாம் என்று ஆர்ஜென்டீனா வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரிட்டிஷ் கடற்படையினர் குறித்த இலக்கை அடைவதற்கு இன்னும் 2500 மைல்கள் செல்ல வேண்டியிருக்கிறது.

இன்று நள்ளிரவு பிரிட்டிஷ் கடற்படையினர் ஆர்ஜென்டீனா விமானங்களை நேரடியாக தாக்கக்கூடிய தூரத்திற்கு சென்று விடுவார்கள் என்று லண்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

நெருக்கடி நிலைமையிலும் சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

## யுத்தத்துக்கு ஆர்ஜென்டீனா தயாராகிறது!

புவனர்ஸ் அயர்ஸ் ஏப். 22

போக்லண்ட் தீவுக்கு ஆர்ஜென்டீனா 10,000 துருப்புக்களை அனுப்பி வைத்துள்ளது, ஆர்ஜென்டீனா துருப்புகள் போர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

போக்லண்ட்தீவில் சகல இடங்களிலும் ஆர்ஜென்டீனா துருப்புகள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதே சமயம் இன்று நள்ளிரவு பிரிட்டிஷ் கடற்படையினர் முழு அளவிலான போருக்கு தயாராகி விடுவார்கள் என்று லண்டன் செய்திகள் கூறுகின்றன.

சமாதான பேச்சுவார்த்தைகள் பலனளிக்காது போனால் போர் இடம்பெறுவது தவிர்க்கமுடியாததாகவிடும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

## பாகிஸ்தான் ராணுவ பலம் அதிகரிப்பு!

புதுடில்லி, ஏப் 22

14 ராணுவத் தளங்களை பாகிஸ்தான் விஸ்தரித்து நவீனமயமாக்கவுள்ளது. இதனுடன் இந்திய எல்லைக்குப் பக்கத்தில் பல்வேறு பகுதிகளில் 11 புதிய விமான நிலையங்களும் நிறுவப்பட்டு வருகின்றன. இவை புதிய அமெரிக்க எப்–16 போர் குண்டு பொழியும் விமானங்களை செயல்படுவதற்காக தயார் செய்யப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி வழங்குவதை வாஷிங்டனில் சில வட்டாரங்கள் எதிர்க்கின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் அணுகுண்டு உற்பத்தி சம்பந்தமாககொடுத்துள்ள வாக்குறுதிகள் தொடர்பாக செனட் சபையின் ஜனநாயக் கட்சியின் துணைத் தலைவராக திரு. அலன் கிரன்ஸ்டன் ஜனநாயகக்கட்சி பிரதிநிதிகள் சபைஉறுப்பினர் திரு. ஜோனதன் ஆகிய இருவரும் இதுபற்றிச் சந்தேகம் தெரிவித்துள்ளனர். நடப்பு ஆண்டு இறுதியில் எப்–16 விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு கையளிக்க ஆரம்பிக்கும் என்று நம்பப்படுகிறது. இந்தவிமானங்களுடன் சி–130 ராணுவப் போக்குவரத்து விமானம் பீரங்கி, பொருந்திய ஹெலிகொப்டர் ஆகாய பாதுகாப்பு அமைப்பு, மற்றும் தளபாடங்களும் பாகிஸ்தானுக்கு வழங்கப்படும்.

பாகிஸ்தானின் ராணுவ செலவீனம் 1981–82 நிதி ஆண்டில் 160 கோடி டாலராக இருக்கும். 1972–73 ஆண்டில் இது 40 கோடி டாலராக மாத்திரம் இருந்தது. ராணுவச் செலவு 400 சத விகிதம் பெருகியுள்ளது.

## இஸ்ரேலியத் தாக்குதல்: 20பேர் பலி!

லண்டன், ஏப். 22

இஸ்ரேலியர் நடத்திய விமானத் தாக்குதலால் 20 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

பாலஸ்தீனியர் வாழும் பகுதியிலும் மக்கள், குடியிருப்புப் பகுதிகளிலும், குண்டு வீச்சு நடைபெற்றதாக கூறப்படுகின்றது. விமானத்தாக்குதலை அப்பகுதிகளில் உள்ள ஐ. நா. படைகளும் ஊர்ஜிதம் செய்துள்ளன.

விமானத் தாக்குதலில் 2 சிரியாநாட்டு விமானங்களும், ஒரு இஸ்ரேலிய விமானமும் சேதமடைந்துள்ளதாக சிரியா அறிவித்துள்ளது. ஜூலையில் கைச்சாத்தான போர் நிறுத்த உடன்படிக்கையை இஸ்ரேல் மீறிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி ஆராய ஐ. நா பந்தோபஸ்து சபை இன்று கூடுகிறது. (க)

## வேட்புமனுக்கள் தாக்கல்

புதுடில்லி, ஏப். 22

4 மாநில சட்டசபைக்கும், லோகசபை இடைத்தேர்தலுக்குமான வேட்பு மனுக்கல் தாக்கலாகி வருகின்றன. மேற்கு வங்காளத்தில் 200பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். இவர்களில் 8பேர் முன்னாள் அமைச்சர்களாகும். ஹரியானாவில் 90 இடத்திற்கு 400 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். [க]

## பாரத பட்ஜட்

புதுடில்லி, ஏப். 22

1982ம், 83ம் ஆண்டுக்கான பாரதத்தின் பட்ஜட் விவாத 2ம் கட்டம், லோகசபையில் நேற்று முடிவடைந்தது.

## சீனாவிலும்வர்த்தக வலையங்கள்

ஹாங்கான் ஏப். 22

சீனாவின் ஹய்னான் தீவில் சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளதாக சீன அரசாங்கம் அறிவித்துள்ளது

சீனாவின் கரையோரத்தில் உள்ள குவாங்சொங் ஃபூஜி மாகாணங்களில் ஏற்கனவே வர்த்தக வலயங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இங்கே முதலீடு செய்யும் அந்நிய வர்த்தக கம்பனிகளுக்கு விசேஷ வசதிகள் வழங்கப்படுகின்றன.

ஹய்னானில் வர்த்தகம் தொடங்கும் அந்நியர்களுக்கு நீண்ட கால காணி ஒப்பந்தம், நூறுவீத அந்நிய முதலீடு, தொழிலாளர் ஊதிய நிர்ணயம், தொழிலுக்கு அமர்த்துவது மற்றும் தொழில் நீக்கம் செய்வது சம்பந்தமான சகல வசதிகளுக்கும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

இதனுள் அந்நிய முதலீட்டாளர்களுக்கு விசேஷ காப்புறுதியும் அரசாங்கம் வழங்கும் குறிப்பாக வேலைநிறுத்தம், சுவீகரிப்பு ஏற்பட்டால் முதலீட்டாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும். சீனாவில் அந்நிய முதலீட்டுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கலப்பு வர்த்தக நிறுவனங்களில் மொத்தம் 150கோடி சீனநாட்டுப்பணம்) முதலீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் அந்நிய கம்பனிகளுக்கு முதலீடு செய்யும்படியும், பிரதிநிதிகளை அனுப்பும்படியும் சீனா அழைப்பு விடுத்துள்ளதாக சீன ஏடுகள் எழுதியுள்ளன.

### ஜனதா கட்சி முன்னாள் செயலாளர் மீது

## கொலை முயற்சிக் குற்றம் சுமத்தப்பட்டது!

சென்னை, ஏப் 22

ஜனதா கட்சி முன்னாள் செயலாளர் ஜோன் மோசஸ் மீது கொலை முயற்சி குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிள்ளது.

ஜனதாகட்சி உறுப்பினர் இருவரைத் தாக்கியதாக கூறப்பட்ட புகாரைத் தொடர்ந்து ஜோன் மோசசும் மற்றும் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்த ஜோன் மோசஸ் கட்சிலிருந்தும் நீக்கப்பட்டார். (க)

## இருவர் பலி!

சென்னை, ஏப். 22

மதுரையில் நடந்த பஸ் விபத்தில் காயமடைந்த இருவர், திண்டுக்கல் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்கள்.

திண்டுக்கல்லிலிருந்து ராஜபாளையத்திற்குச் சென்ற பஸ்சும், மதுரையிலிருந்து வந்த பஸ்சும் மோதிக்கொண்டதால் இந்தவிபத்து ஏற்பட்டது. முதல் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். [க]

### வேம்பிராய் கிராம

## 50 குடும்பங்களுக்கு மே.ஜெர்மன் உதவி

(பச்சிலைப்பள்ளி)

கோப்பாய்த் தொகுதியில் உள்ள வேம்பிராய் கிராமத்தில் வசிக்கும் 50 குடும்பங்களுக்குத் தேவையான சமையற பாத்திரங்களை மேற்கு ஜெர்மனியிலுள்ள சர்வதேச நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

இச்சமையல் பாத்திரங்கள் அறவழிப் போராட்டக்குழு மூலமாக வழங்கப்பட்டது.

மேற்சஜெர்மனி சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதியான திரு. அல்பிரட் கொஸ் நேரடியாக வந்து பாத்திரங்களை வழங்கினார். (கி)

### நிஸ்கோ பிரிவு:

## அங்கத்தவர்களுக்கு கடன் வசதி

(கரவெட்டி)

''யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'நிஸ்கோ' பிரிவை சிறந்த முறையில் நடத்துவதற்கு பணிப்பாளர் சபை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. 'நிஸ்கோ' பிரிவில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளவர்களைகொண்டே இப்பணிப்பாளர் சபை உருவாக்கப்படவுள்ளது''

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் செல்வி எஸ். மகேஸ்வரி கரவெட்டி மேற்கு கிராம சேவகர் பிரிவில் 'இளைஞர் கழகம்' ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: 15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் சேர்ந்து கொள்ளக்கூடிய இந்த 'நிஸ்கோ'வில் அவர்களுக்குஎன்று பலவேலைத் திட்டங்களும் உருவாக்கிக் கொடுக்கப்படவுள்ளன. இதில் சேர்ந்து கொண்ட அங்கத்தவர்களைக் கொண்டு பணிப்பாளர் சபை ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது. இப்பணிப்பாளர்சபை உருவாக்கப்பட்டதும் அங்கத்தவரின் தகமைக்கு ஏற்ப 10,000 ரூபா வரை கடன் வழங்கவும்திட்டமிடப்பட்டு இருக்கிறது என்றார்.

## ஆயுதப்படை சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

ஆயுதப் படையினருக்கு சம்பள உயர்வுபற்றி ஆராய குழு ஒன்று அமைக்கப்படும்.

அரச ஊழியர்களின் சம்பள விகிதத்துடன், ஆயுதப்படையினரின் சம்பளத்தையும், இக்குழு சீர்படுத்துவதுபற்றி ஆராயும். [க]

## அறிவித்தல்

'ஈழநாடு' காரியாலயத்தின் சகல பிரிவுகளும் 63, சிவன்கோவில் மேற்குவீதி (மானிப்பாய் வீதி) கட்டிடத்தில் வழமைபோல் செயல்படுகின்றன என்பதை அறியத்தருகின்றோம். விளம்பரம் மற்றும் ஏனைய சகல விடயங்களுக்கும் இதே முகவரியில் தொடர்புகொள்ளவும். தொலைபேசி தொடர்புகளுக்கு 8126, 389.

நிர்வாகி.

# கடற்றொழிலை அரசு நசுக்குகிறது

## காவலூர் எம். பி. கவலை

[நயினாதீவு]

''கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம குறைபாடுடையதாகக் காணப்பட்டதனால் தான் கடற்றொழில் விரிவாகக சேவாச் சங்கம் உருவெடுத்துள்ளது. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவைக்க முடியவில்லை. கூட்டுமுயற்சியே நற்பயன் அளிக்கக்கூடியதாகவிருந்தும் கூட்டுறவுச்சங்கம் செயலிழந்துவிட்டதனால் இன்று அது பின்தள்ளப்பட்டு நற்சேவை மனப்பான்மையுடன் கடற்றொழில் விரிவாக்க சேவாச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறியக் கூடியதாவிருக்கிறது.''

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நயினாதீவு கடற்றொழில் விரிவாக்க சேவைச்சங்கத்தினால் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க சேவாச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்ட கடற்றொழில் கருத்தரங்கில் ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில்இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அரசாங்கம் எமது மீனவர்களைக் கைவிட்டு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துவருகிறது, கடற்றொழில் உடனுக்குடன் பயனை அனுபவிக்கக்கூடிய தொழிலுமாகும். இதனை அரசாங்கம் நசுக்கி விட்டது. நாங்கள் எமது கடற்றொழிலாளர் விஷயமாகப் பாராளுமன்றத்தில் பலமுறை பேசிய பொழுதும் எந்தவிதமான நிவர்ரணமும் கிடைக்கவில்லை. மாருகக் காரைநகரில் இருந்த 'சீநோர்' தொழிற்சாலையையும் எடுத்துக் கொண்டது.

''கடற்றொழிலாளர்க்கெனத் தனியான வீடமைப்புத் திட்டம் ஒன்றைத் தரும்படி வற்புறுத்தினேம் தரவில்லை ஆனல் தொகுதிவாரியாகத் தரப்பட்ட வீடமைப்புத்திட்டத்தில் மீனவ குடும்பங்களுக்கே முன்னுரிமை அளித்துள்ளோம். நயினாதீவைப் பொறுத்தவரையில் அரச காணிகள் இல்லாததினால் வீடமைப்புத் திட்டத்திகீழ் வீடுகள் கட்டித்தரப்படவில்லை. சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு உழைப்புடன் நின்றுவிடாது கல்வி அறிவிலும், ஒற்றுமையிலும் சிறந்து விளங்கவேண்டும் என்றும் இதற்குப் பனம்பொருள் உறபத்திச் சங்கத்தின் வளர்ச்சி ஓர் எடுத்துக்காட்டு என்றும் சொன்ஞர்.''

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரி திரு. ஏ.பிலிப் தலைமைவகித்துப் பேசுகையில் ''மொத்தம் 65 விரிவாக்க சேவாச்சங்கங்கள் உண்டென்றும் அவற்றில் 10 தீவுப் பகுதியில் உண்டென்றும் கூறினார். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கும், கடற்றொழில் விரிவாக்க சேவாச் சங்கத்திற்குமான வேறுபாட்டையும் விளக்கிக்கூறினார்.

பலரும்உரையாற்றினார்கள்

பனைவள விஸ்தரிப்பு:

# துரித அபிவிருத்தியை செயலில் காட்டுவாராம்

## சபைத் தலைவர் உறுதி

(புலோலி நிருபர்)

''எமது தலைவர்களும், அரசாங்கமும், மக்களும் குறிப்பாகப் பனையை நம்பி வாழுகின்ற மக்கள் அனைவரும் எதிர்பார்க்கும் துரித அபிவிருத்தியை செயலில் காட்டுவதற்கு நான் உறுதி பூண்டிருக்கிறேன். மாவட்ட ரீதியாகப் பனைவள அபிவிருத்தி விஸ்தரிக்கப்படும்''. என்று இலங்கைப் பனம்பொருள்அபிவிருத்திச் சபையின் புதிய தலைவரான திரு. கே. நடராசா தனது முதலாவது பனம் அபிவிருத்தி சபைப் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

இப்பணிப்பாளர் சபைக்கூட்டம் யாழ். தேசிய வீடமைப்புச் செயலகத்திலுள்ள சபையின் தலைமைப் பணியகத்தில் நடைபெற்றது.

புதிய தலைவரின் நியமனத்திற்குப் சாராட்டுத்தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் கடந்த கால சபையின் செயற்பாடுகள் பற்றி ஆராயப்பட்டது. சகல மாவட்டங்களிலும் பனம் பொருள் அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டங்களைப் பற்றித் தலைவர் பணிப்பாளர்களுக்கு விளக்கிக் கூறினார்.

இவ்வருட இறுதிக்குள் மட்டக்களப்பு, வவனியா, மன்னார், திருக்கோணமலை, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 'கற்பகம்'' விற்பனை நிலையங்களைத் திறந்துவைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தங்க நகைகளுக்கும்
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

த பிருன்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேல்திக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

த பிருன்ஸ்
கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

## இன்று பரிசளிப்பு விழா

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது. கல்லூரி அதிபர் திரு. கே. அருணசலம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டை எம்.பி திரு. தா. திருநாவுக்கரசு கலந்துகொள்வார். எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். சிறப்பு விருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் கலந்து கொண்டு உரையாற்றுவார். பரிசில்களை திருமதி கலைமகள் திருநாவுக்கரசு வழங்குவார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். (கி)

## காய் கறி உற்பத்தியாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு காய் கறி உற்பத்தியாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நல்லூர் உதவி அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

உள்நாட்டு வியாபாரதிணைக்கள அலுவலர் திரு. எம். சி நவரத்தினம் இச் சங்கத்தின் பயன்பாடுகள்பற்றி விளக்கமாகத்தெரிவித்தார்.

திரு. செ. இராசா ஜே. பி. தலைவராகவும், கோண்டாவில் மேற்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ச. யோகராசா செயலாளராகவும், இளைப்பாறிய தலைமை ஆசிரியர் இ. பொ. குமாரசுவாமி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

உப செயலாளர்: செ. திருநாவுக்கரசு, உப தலைவர் த. துரைமணி, நிர்வாகசபை உறுப்பினர்கள் க. சிவராசா (விசேட சேவை உத்தியோகத்தர்) நா.கமலநாதன், பொ. இராமநாதன், சி. செல்லத்துரை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# மீனவர்கள் முன்மாதிரி!

(பச்சிலைப்பள்ளி)

ஆனையிறவிலுள்ள தட்டுவன் கொட்டிப் பகுதி மீனவர்கள், இருல் பிடித்ததினால் ஒரு நாளில் கிடைத்த வருமானமான 35,500 ரூபாவையும் தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் கோவில் கட்டிட நிதிக்கு வழங்கினார்கள். இதற்கான ஏற்பாட்டினை தட்டுவன் கொட்டி கிராம சேவையாளர் திரு. சி. தனபாலசிங்கம் மேற்கொண்டிருந்தார்,

இதேபோன்றுஇன்னுமொரு தினத்திலும் கிடைக்கும் வருமானத்தினை கோயில் கட்டிட நிதிக்காக கொடுக்க இம் மீனவர்கள் முன்வந்துள்ளார்கள்.

நெல் கொள்வனவு:

# விவசாயிகளைப் பாதுகாக்க புதிய திட்டம்

[பச்சிலைப்பள்ளி]

கிளிநொச்சிப்பகுதி விவசாயிகளை தரகர்களின் தொல்லையிலிருந்து பாதுகாக்க புதிய திட்டமொன்றை நெல் சந்தைப்படுத்தும் திணைக்களம் வகுத்துள்ளது.

ஐந்து புசலுக்குமேல் நெல்லை விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள், இனிமேல் நேரடியாக நெல்லை, கிளிநொச்சியிலுள்ள நெற்சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் விற்பனை செய்யும் பட்சத்தில், விவசாயிகளுக்கு ஏற்படும் செலவு, ஏற்றுக்கூலி என்பனவற்றையும் மேற்படி திணைக்களம் வழங்க முன்வந்துள்ளது.

இத் திட்டத்தினால், தரகர்கள், விவசாயிகளின் இருப்பிடங்களுக்குச் சென்று, குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்து கொள்ளை இலாபமடிப்பது தவிர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐந்து புசலுக்குக் குறைவான நெல்லை விற்பனைசெய்ய விரும்பும் விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையங்களிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும், கமநல சேவை நிலையங்களிலும், நியாயமான விலைக்கு நெல்லை விற்பனை செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# "நான் ஓய்வு பெற்றதும் ஆசிரியராவேன்"

## பருத்தித்துறை எம். பி. கூறுகிறர்

(பச்சிலைப்பள்ளி)

''பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஆசிரியராக பணிபுரிவதையே நான்விரும்புகிறேன், ஆசிரியராக முன்பு நான் பணி புரிந்த போது, குழந்தைகளோடு பழகிய காலங்கள் எனக்கு மகிழ்ச்சியை அளித்தது ''

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு, க. துரைரத்தினம் கூறினார்.

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உறையாற்றினார்.

இப்போட்டி திரு. பாஸ் வென்டக்கோன் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை எம். பி, தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:–

''நான் முன்னர் ஆசிரியராக பணிபுரிந்ததினால் இன்று கூட சில அலுவலகங்களுக்குச் செல்லும்போது அங்குள்ளவர்கள் என்னை 'மாஸ்ரர்' என்று அழைக்கும்போது நான் மகிழ்ச்சியடைவேன்.''

''இன்று ஆசிரியர் தட்டுப்பாடு பெரும் தலையிடியாகவுள்ளது. அரசாங்கம் ஆசிரிய நியமனங்களைச் செய்யும்போது சனத்தொகை அடிப்படையில் தமிழருக்குக் கிடைக்கவேண்டிய தொகை கிடைப்பதில்லை' என்றார்,

# விசர்நாய் கடித்து இளைஞர் மரணம்

[பண்டத்தரிப்பு]

விசர்நாய்க் கடிக்கு இலக்கான மாதகலைச் சேர்ந்த 16 வயது இளைஞர் ஒருவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மாதகல் வாய்க்கால் என்னுமிடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அன்ரன் என்பவரே இவ்வாறு பரிதாபகரமான முறையில் இறந்தவராவர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் இவரது மரணவிசாரணை நடைபெற்றது.

காலம் சென்ற இளைஞருக்கு இருவாரங்களுக்கு முன்னர் நாய் கடித்ததாகவும், அது விசர்நாய் என்று அறியாததினாலும், சிறிய காயமாக இருந்ததினாலும் ஏற்பு ஊசி எதுவும் போடாது மரமஞ்சள் குடித்ததாகவும் பின்னர் திடீரென வலிப்பு ஏற்பட்டு அவஸ்தைப் படவே உடனடியாக அவரை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும், நோய் மிகவும் கடுமையாகவே, யாழ் அரசினர் வைத்தியசாலையி அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் மரணமானதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது. விசர்நாய்க் கடியினால் ஏற்பட்ட மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

## புதுவருட நிர்வாகிகள்

[இமையாணன்]

இமையாணன் சிவனடி சங்கத்தின் 55–வது ஆண்டுத் தலைவராக திரு. சோ. சபானந்தன் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உப–தலைவர்; ந. ஆனந்தராசா, செயலாளர்: த. புவனேந்திரன், உப–செயலாளர்: சி. கணேசதாஸ், தனதிகாரி: ஐ. விநாயகமூர்த்தி, மற்றும் 12 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# சிமெந்து விநியோகத்தில் சீர்கேடு!

[மாவிட்டபுரம்]

கட்டிடவேலைகளை மேற்கொண்டுள்ள பொதுமக்கள் தமக்கு தேவையான சிமெந்தைப்பெற முடியாதிருப்பதால் கஷ்டமுறுவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் சிமெந்து விநியோகம் செய்வதில் அண்மையில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

தொழிற்சாலையின் சிமெந்து விநியோகத்தை நிறுத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக சிமெந்தை வழங்கி அவற்றின் மூலமாகசிமெந்தை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்ட போதும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு போதிய சிமெந்து வழங்கப்படவில்லையெனவும், பொதுமக்கள் சிமெந்துக்காக கூட்டுறவுச் சங்கங்களை நாடினால் ஏமாற்றமே கிடைக்கிறதென்றும் கூறப்படுகிறது.

சிமெந்து தொழிற்சாலையில் வேலைசெய்யும் இடத்திலேயே சிமெந்து விநியோகிக்கும் பிரிவு மூலம் தொடர்ந்து சிமெந்து விநியோகிக்கப்படுகின்றபோதும் அதன்மூலம் போதிய சிமெந்தை கூடிய விரைவில் பெறமுடிவதில்லையெனவும் குறைந்த சிமெந்தை காலதாமதத்தின் பின்னரே பெறமுடிகின்றதென்தும் அதற்கு போக்குவரத்துக் கட்டணமாக அதிகரித்த கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றின் காரணமாக வீடு கட்ட ஆரம்பித்தவர்களும். மற்றும் கட்டிட வேலைகளை மேற்கொண்டுள்ளவர்களும் பெரிதும் கஷ்டமுறுவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சிமெந்து விநியோகத்தை சீர்படுத்தி பாவனையாளர்களுக்கு போதிய சிமெந்து கூடியகெதியில் கிடைக்கக் கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென பாவனையாளர்கள் கோருகிறார்கள். [கு]

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

பாரதி நூற்றாண்டை முன்னிட்டு தேசியகலை இலக்கியப் பேரவை நடாத்தும் ஆய்வரங்குத்தொடரின் நான்காவது நிகழ்வு இன்று பிற்பகல் யாழ். றிம்மர்மண்டபத்தில் நடைபெறும். ஆசிரியர் மா. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் மேற்படி ஆய்வரங்கில் ''பொருளியற்சிந்தனையும் பாரதியும்'' என்ற தலைப்பில் திரு. அ. ஜெயரத்தினம் ஆய்வுரை நிகழ்த்துவார். ஆய்வரங்கின் முடிவில் பாரதியார் பாடல்களைக்கொண்ட 'கவிதா நிகழ்வு' வீ. எம். குகராஜா தலைமையில் இடம் பெறும்.

## ஏற்பு ஊசிமருந்து தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் ஏற்புஊசி மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் தனியார் மருந்துச்சாலைகளுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

## தலைவராகத் தெரிவு

(கரவெட்டி)

கட்டுவன் கொட்டி கிராமோதய சபைத் தலைவராக திரு.க. தில்லையம்பலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சனசமூக ஒன்றிய

## இசை நடன நாடக முடிவுகள்

(மாவிட்டபுரம்)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களினிடையே இசை, நடன, நாடகப்போட்டிகளை அண்மையில் நடத்தியது. யாழ் மத்திய கல்லூரி ம்ண்டபத்தில் நடந்த இப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### இசைப்போட்டி

இசைப்போட்டிகள்:- தனிப்பாடல்:- 1ம் இடம் புத்தூர் கலையகம் சனசமூக நிலையம், 2-ம் இடம் சரசாலை தெற்கு சனசமூக நிலையம், 3-ம் இடம் புத்தூர் பாரதி சனசமூக நிலையம், புதிய ஆக்கப்பாடல்:- 1-ம் இடம் புத்தூர் கலையகம் சனசமூக நிலையம், 2-ம் இடம் நாவாந்துறை சென். மேரிஸ் கலாமன்ற ச. ச. நிலையம், குழுப் பாடல்:- 1-ம் இடம் திருநெல்வேலி கலாமன்ற ச: ச. நிலையம், 2-ம் இடம் மயிலிட்டி பராதி ச. ச. நிலையம், 3-ம் இடம் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையம், பாரம்பரியபாடல்:-4-ம் இடம் திருநெல்வேலி கலாமன்ற ச.ச. நிலையம்.

குழு நடனம்:1-ம்இடம்காங்கேசன்துறை இளைஞர் முன்னேற்ற ச.ச. நிலையம், 2-ம் இடம் திருநெல்வேலி கலாமன்ற ச.ச. நிலையம், 3-ம் இடம் மயிலிட்டி பாரதி சனசமூக நிலையம்.

தனி நடனம்: 1-ம் இடம் காங்கேசன்துறை இளைஞர் முன்னேற்ற ச.ச. நிலையம், 2-ம் இடம், 3-ம் இடம் திருநெல்வேலி கலாமன்ற ச. ச. நிலையம்.

சமூக நாடகம்: 1-ம் இடம் கைதடி சரஸ்வதிச.ச. நிலையம் 2-ம்இடம்கைதடிதெற்கு ச.ச. நிலையம், 3-ம் இடம் திருநெல்வேலி கலாமன்றச். ச.நிலையம்

வரலாற்றுநாடகம்;1ம்இடம் குரும்பசிட்டி உதயதாரகை ச. ச. நிலையம், 2-ம் இடம்: மயிலிட்டி பாரதி ச. ச. நிலையம், 3-ம் இடம் அல்லைப்பிட்டி அறிவகம் ச. ச. நிலையம்.

இசை நாடகம்: 1-ம் இடம் மயிலிட்டி பாரதிச.ச.நிலையம், 2-ம் இடம் சென்.மேரிஸ் சனசமூக நிலையம்,

நாட்டுக்கூத்து: 1-ம் இடம் மகாத்மாஜி ச.ச. நிலையம் புத்தூர், 2-ம்இடம் நாவாந்துறை சென்.மேரிஸ் ச. ச. நிலையம்,

நாட்டிய நாடகம்:1-ம்இடம் கரம்பன் கிழக்கு ச.ச நிலையம்.

தனியாள்நடிப்பு: 1-ம்இடம் கைதடி சரஸ்வதிச.ச.நிலையம், 2-ம் இடம் கச்சாய் விநோபா ச.ச.நிலையம், 3-ம் இடம் கலாமன்ற ச. ச. நிலையம் திருநெல்வேலி. [கு]

இரு பக்கமும் அடிபடும்

# மத்தளத்தின் நிலையில் நான் இருக்கிறேன்

## ராஜலிங்கம் பாராட்டுவிழாவில் அமிர்தலிங்கம் கூற்று

[கரவெடிட்டி]

மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் அடி என்ற நிலையில் நான் இன்று இருக்கின்றேன். என்று எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் கொற்றுவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தின் கொழும்புக்கிளை நடாத்திய 2வது ஆண்டு விழாவிலும், விளையாட்டுப் போட்டியிலும், உடுப்பிட்டி எம். பி. திரு, த. இராசலிங்கத்திற்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவிலும் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு பேசுகையில் குறிப்டார்.

திரு மா. கதிரமலை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து பேசுகையில்: எத்தனையோ முனைகளின் மத்தியில் நா தாக்கப்பட்டு வருகின்றோம். ஒரு பக்கத்தில் ஆட்சியாளர்கள், அவர்களது பத்திரிகைகள், தமிழ்ப் பத்திரிகைகள் எம்மைத் தாக்கித் தீர்த்து வருகின்றன.

''கடந்த வருடம் பாராளுமன்றத்தில் ஆட்சியாளரில் ஒருவர் என்னைப்பற்றிப்பேசியதை மக்கள் அறிந்து இருப்பார்கள். காலிமுகத் திடலில் வைத்துச் சுட வேண்டும், தூக்கில்போட வேண்டும், கமுகமரங்களுக்கு இடையில் வைத்துக் கிழிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அது ஒருபுறமிருக்க கேலிச் சித்திரங்கள் மூலம் என்னை நையாண்டி செய்யப்பட்டும் வருகிற இவற்றை மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

இப்பொழுது தீவிரவாதிகள் என்று கூறிச் சிலர் நடித்துக் கொண்டு எம்மைக் கேவலமாக தீர்த்துக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மத்தளத்தற்கு இரு புறமும் அடி என்ற நிலையில் நான் இருக்கும்இவ்வேளை அன்பு உள்ளம் கொண்ட மக்கள் மத்தியில் இன்று மன ஆறுதல் கிடைக்க முடிகின்றது என்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு த. இராசலிங்கம் தமிழ் இனத்தின் ஒற்றுமைச் சின்னமாக ஆற்றல் நேர்மை மிக்கவராகத் தமது இனத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.

இன்று தமிழ் இனம் மிகமிக நெருக்கடியான நிலையில் இருக்கிறது. தமிழ் இனம் தமது உடைமை, நிலத்தைப் பாதுகாக்க முடியாதநிலையில்கடந்த ஐந்து வருட காலமாக வாழ்ந்து வருகிறது. 77ல் கலவரம். 78ல் திருகோணமலையில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டது. 79ல் இளைஞர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்மக்களது விலை மதிக்கமுடியாத சொத்தான நூலகம் எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டது. இத்தனை துன்பங்கள் மத்தியிலும் தமிழ் இனம் தனது நிலை தவறுது வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

### சாபக்கேடான அநீதிகள்

''என்னதான் சலசலப்பு ஏற்பட்டாலும் எமது மக்கள் சரியானதைச் சரியான நேரத்தில் செய்வார்கள் என்று தந்தை செல்வா சொல்வார்.''

ஆண்டபரம்பரை அடிமைப்பட்டதற்கு இந்த சமுதாயத்தில் உள்ள அநீதியே காரணமாகும். இந்த அநீதிகள், கொடுமைகள் இப்பொழுதும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்தச் சாபக்கேடு முற்றாக ஒழிந்து விடவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கும் போது பின் தங்கிய சகோதரர்கள் வாழும் பகுதிகளுக்கும் நிதி வழங்கி அப்பகுதிகளை முன்னேற்றம் அடைந்த பகுதிகளுக்குச் சமமான நிலைக்கு உயர்த்த வேண்டும் என்று நாம் தீர்மானம் எடுத்துள்ளோம். எமது சமுதாய விடுதலையில் அநீதிகளை ஒழிப்பதைப்பற்றி நாம் உணர்ந்துள்ளோம். சாதி, சமய, அரசியல் கட்சி பேதமற்ற ஒரு சமுதாயத்தில்தான் உண்மையான விடுதலை ஏற்படும் என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. எம். சிவம் தம்பரம் பேசுகையில் '1977ம் ஆண்டிற்கு முன்னர் நாசி வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களாகவும், வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் இருந்தோம். இதனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் தமிழினம் இரண்டாகப் பிரிந்து இருந்தது. ஆனால் அந்தநிலை 72ற்குப் பின்னர் மாறியது. எம்மிடையே ஏற்படுத்தப்பட்ட ஒற்றுமையினால் இப்பொழுது நாம் சுபீட்சப்பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றோம், செயற்பட்டு வருகின்றோம். எமது ஒற்றுமையினாலேயே தம்பி இராசலிங்கத்தை நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைக்க முடிந்தது.

எம்மிடையே உள்ள ஒற்றுமையைக் குலைக்க சில தீயசக்திகள் இப்பொழுது முனைந்து வருகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி இராசலிங்கத்தை ஒதுக்கித் தள்ளுவதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் தம்பி இராசலிங்கத்திற்கு கூட்டணி எப்பொழுதும் முன்னுரிமை கொடுத்து வருகிறது. என்பதை கூறிவைக்க விரும்பு

(7ம் பக்கம் பார்க்க)

ஈழமாணவர் பொதுமன்ற

## மேதின விழா

(யாழ்ப்பாணம்)

ஈழமாணவர் பொது மன்றத்தினர் யாழ்ப்பாண நகரில் பிரம்மாண்டமான ஊர்வலமொன்றையும் மாபெரும் பொதுக் கூட்ட மொன்றையும் நடத்தத்தீர்மானித்துள்ளனர்.

ஊர்வலம் கச்சேரியடியிலிருந்து ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக கடற்கரை வீதி சென்று, கரையூர் ஊடாக பருத்தித்துறை வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தை வந்தடையும். அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

ஊர்வலத்தில் பங்குபற்ற சகல தொழிற்சங்கங்களும் அழைக்கப்பட்டுள்ளன. ஊர்வலத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் மீதான ஒடுக்கு முறைகளை எதிர்த்து கோஷங்களை முன்வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஈழமாணவர் பொது மன்றத்தின் மட்டுநகர்க் கிளையினர் காரைதீவில் இருந்து பிரமாண்டமான ஊர்வலமொன்றையும், கல்முனையில் பொதுக் கூட்டத்தையும் நடத்தத் தீர்மானிததுளளனர். இதில் பெருந்திரளாக மாணவர்கள், தொழிலாளர்கள் பங்குபற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## பச்சைநிற பொன்னுடை

[கொழும்பு]

பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில், நேற்று முன்தினம் அகில உலக இந்து மாநாட்டை ஆரம்பிதது வைத்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அமைச்சர் திரு. ம.ச. இராசதுரை பச்சை நிறப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

ஜனாதிபதியின் பாரியாருககு அமைச்சர் இராசதுரையின் பாரியார் பொன்னுடை போர்த்திக் கௌரவிததார். இப்பொன்னுடையும் பச்சை நிறத்துலதான் இருந்தது. ம)

THE BRITISH COUNCIL

in

Collaboration with

JOHN KEELLS LIMITED

LEVER BROTHERS (CEYLON) LIMITED

CEYLON TOBACCO COMPANY LIMITED

presents

TALES OLD & NEW

BY

BRIAN D. BARNES

(One Man Theatre)

at

CHUNDIKULI GIRLS' COLLEGE HALL

on

MONDAY 26 APRIL AT 6-30 P. M.

Tickets: Rs. 15/- Rs. 10/- (reserved)

Rs. 5/- Balcony (reserved)

from

University of Jaffna, Dept. of Languages and Cultural Studies

Hotel Ashok, Clock Tower Road, Jaffna.

CLS Bookshop, Hospital Road, Jaffna.

2911

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 10ம் திகதி

வெள்ளிக்கிழமை

(23—4—82)

மேடம்: அவசர முடிவின் மூலம் ஆபத்தைவிலைகொடுத்து வாங்குவீர்கள், மனதில்அமைதி நிலைநிக்காது, வியாபாரங்சள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

இடபம்; பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பம் பிரச்னைகளில் சுமுகமானநிலை தென்படும், சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும்.

மிதுனம்: ஆசாக்குறைவான சம்பவங்கள் இடம்பெறும், உடல்நலத்தில் அதிக கவனஞ் செலுத்தவும், கொடுக்கல்வாங்கல்களை இன்று குறைத்துக் கொள்ளவும்.

கடகம்: மாதுருவழிப்பெருமைக்கு இடமுண்டு, மனம் போல் யாவும் நடக்கும், இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

சிங்கம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டிபோடும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கன்னி: இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், ஏமாற்றத்திற்கு இடமுண்டு, எனினும் இருள்சூழ்ந்த நிலையிலும் எதிரிகள் தென்படலாம்.

துலாம்: இதயம் இன்றுதுன்பத்தால் விம்மும், குடும்பத்தில் உறவு முறைகள் அன்பு கொண்டதாக இருக்கும், புத்திரராலும் மதிப்பு உயரும்.

விருச்சிகம்: எதிர்பாராத இடங்களில் தடைகள் ஏற்பட்டுவரும், தொழில்துறையில் அவ்வளவு திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும்.

தனு: தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடலில் மதிப்பு உயரும், இறைவழிபாடு மேலிடும், செய்தொழிலாலும் சிறப்புண்டு.

மகரம்: புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடுஏற்படும், பொதுத்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும், இல்லத்தில் இனிமைக்கு இடமுண்டு.

கும்பம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும், புதியதொழில் துறைகளை மனம் நாடும், தூரதேசப் பயணத்திற்கும் இடமேற்படலாம்.

மீனம்; எதிர்பாராத விளைவுகள் மூலம் செலவினங்கள் அதிகமாகும், சிலர் வயழ்க்கையில் கடன்படவும் நேரிடும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## தற்கொலை

(பச்சிலைப்பள்ளி)

கிருமிநாசினி விற்பனை நிலையத்திற்குஅருகில் சலூன்வைத்திருந்தவர், கிருமிநாசினி அருந்தி மரணமானார்.

பளை பஸ் நிலையத்திற்குமுன்பாக சலூன் வைத்திருந்த, க. குமாரசாமி (வயது 48) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

வீட்டில் மனைவியுடன் தகராறு ஏற்பட்டதையடுத்து சலூனை உள்ளே பூட்டிவிட்டு நஞ்சருந்தியதாக மரணவிசாரணையில் தெரியவந்தது. சாட்சியங்களைசாவகச்சேரிபொலிஸ் கான்ஸ்டபிள் திரு.கே.பொன்னம்பலம் ஆஜர் செய்தார். விசாரணையைநடத்திய, பளைப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி, திரு. எம். குமாரவேலு தற்கொலையென்று தீர்ப்பளித்தார்.

## வருடாந்த உற்சவம்

[மாவிட்டபுரம்]

வசாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 28-ம் திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இந்த உற்சவத்தில் மே மாதம் 6-ம் திகதி தேர் விழாவும் மறுநாள் தீர்த்தமும் இடம்பெற உள்ளன.

# புதுவருட தினத்தில் 6 கொலைகள்

(கொழும்பு)

புதுவருடதினங்களான 13ம், 14ம் திகதிகளில் ஆறுகொலைச் சம்பவங்கள் தென் மாகாணத்தில் நிகழ்ந்திருப்பதாகவும் அம்மாகாணத்தின் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது,

இக்கொலைகளில் அநேகமானவை கத்தியால் குத்தப்பட்டும், பொல்லுப்போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்டுமே நிகழ்ந்துள்ளனவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரகெட்டிய என்ற இடத்தில் ஒருவர் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்:

இக்கொலைகளுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் கைதான விபரங்கள்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனுல் சுட்டுக்கொலை செய்யப்பட்டது தொடர்பாக மூவர் கைதாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# தம்பதிகள் தற்கொலை!

[பச்சிலைப்பள்ளி]

கணவனும், மனைவியும் ஒரே நாளிலேயே நஞ்சருந்தி, தமது உயிரைப் போக்கிக்கொண்டதுடன், மனைவியின் வயிற்றிலிருந்த 6 மாத சிசுவுக்கும் முடிவைத் தேடிக்கொண்டனர்!

இப்பரிதாப சம்பவம் பளையிலுள்ள காயாத்தோட்டம் என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

அதே இடத்தில் உள்ள தோட்டமொன்றில் வேலை செய்து வந்த எஸ். கணேசு (வயது 4) க. இலட்சுமி (வயது 21)ஆகிய இளம் கணவனும், மனைவியுமே இவ்வாறு ஒரே நாளில் நஞ்சருந்தி தற்கொலை செய்தவர்களாவார்கள்.

முதலில் குடும்பத்தகராறு காரணமாக மனைவி நஞ்சருந்தியதாகவும், பின்னர் அந்த வேதனை தாங்கமுடியாமல் கணவனும் நஞ்சருந்தி தற்கொலை செய்ததாகவும் மரண விசாரணையில் தெரியவந்தது.

சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி இரு பிரேதங்களையும் பரிசோதனைசெய்தார் மனைவியின் வயிற்றில் 6 மாத ஆண் சிசு ஒன்று காணப்பட்டது. இறந்த பெண்ணின் தந்தை மாதவன் உட்பட மூவர் சாட்சியமளித்தனர்.

மரண விசாரணை நடத்திய பளைப் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு.ம.குமாரவேலு இரு மரணங்களும் தற்கொலைகள் எனத் தீர்ப்பளித்தார்.

# ஆசை நிறைவேறவில்லை; நஞ்சிடம் தஞ்சம்!

(பண்டத்தரிப்பு)

மோட்டார் சைக்கிள் வாங்கி சவாரி செய்வதற்கு ஆசைப்பட்ட வாலிபர் ஒருவருக்கு வீட்டார் பணம் கொடுக்க மறுத்ததினுல் மனமுடைந்தநிலையில் அந்த வாலிபர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மானிப்பாயைச் சேர்ந்தசபாரத்தினம் விமலநாதன் என்னும் 26 வயது இளைஞரே இவ்வாறு இறந்தவராவர். இவரது மரணவிசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ்.எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் யாழ் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது. காலஞ்சென்ற வாலிபர் தமக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கப் பணம் தருமாறு வீட்டாரிடம் கேட்டு வந்ததாகவும், மோட்டார் சைக்கிள் ஒடுவதால் ஆபத்துக்கள் ஏற்படலாம், விபத்துக்களில் சிக்க நேரிடும் என்று பயந்த வீட்டார் அதற்கு மறுப்புத் தெரிவித்து பணம் கொடுக்க மறுத்ததாகவும் இதனுல் மிக மனமுடைந்த அந்த வாலிபர் கிருமிநாசினி அருந்தியதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினுர்.

## தவறி விழுந்து மரணம்

[பண்டத்தரிப்பு]

தென்னைமரமொன்றில் தேங்காய் பிடுங்குவதற்காக ஏறிய நபர் ஒருவர் கால்தவறி நிலத்தில் விழுந்து மரணமானுர்.

அளவெட்டி சான்டான் ஒடை என்னுமிடத்தைச் சேர்ந்த எஸ். இரத்தினசிங்கம் என்பவரே இவ்வாறு இறந்தவராவார். இவரது மரணவிசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் யாழ் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது. இறந்தவரான இரத்தினசிங்கம் அயல் வீட்டில் தேங்காய் பிடுங்கிக் கொண்டிருக்கும்போது கால் தவறி கீழே விழுந்து பலத்த காயங்களுக்குள்ளானதையடுத்து யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் மரணமானதாக சாட்சியங்கள்மூலம் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் விபத்து மரணம் என்று தீர்ப்பு ழவங்கப்பட்டது.

## நல்லூரில் வாலிபரும் அவரது அண்ணியும் தற்கொலை

(நல்லூர்)

நல்லூரில் உள்ள சட்டத்தரணி ஒருவரின் வளவில் இருவர் ஒன்ருக நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்ட பரிதாபகரமான சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

எம். கணேஷ் (வயது 18) அவரது தமையனின் மனைவியான அன்னலட்சுமி (வயது 19) ஆகிய இருவருமே இவ்வாறு மரணமானவர்களாவர். வீட்டுவேலைகளைக் கவனித்து வந்த அன்னலட்சுமிக்கும் அவரது கணவரின் தம்பியான கணேசுக்குமிடையில் கள்ளத் தொடர்பிருந்து வந்தது என்றும், இத் தொடர்புபற்றி கணவருக்குத் தெரியவரவே அவமானத்தால் இவர்கள் இருவரும் நஞ்சருந்தியதாகவும் கூறப்படுகிறது. ஒருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் செல்லும் வழியிலும், மற்றவர் ஆஸ்பத்திரியிலும் இறந்ததாக தெரியவந்துள்ளது.

மரணவிசாரணை மேற்கொண்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். [அ]


இரண்டாவது மாதம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

Regal
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
Kirg Douglas
in
THE FURY
விரைவில்!
''செம்மீன்'' புகழ்
மது — ஜெயபாரதி
நடித்த
ஜனாதிபதி பரிசு பெற்ற
மலையாளப்படம்
கயலும் கயரும்
[கலர்]
டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
இசை: கே. வி. மகாதேவன்

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
கமலஹாசன்
நினைத்தாலே இனிக்கும்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
TARZAN THE APE MAN
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — விஜயா
ராமு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
குழந்தையும் தெய்வமும்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15
நாகேஷ் சௌகார்
எதிர்நீச்சல் (புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி - நாகேஷ்
பூமாலை (புதிய பிரதி)
வெகுவிரையில் அலைகள் ஓய்வதில்லை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
21—23-4-82 வரை
சிவாஜி
கே. ஆர். விஜயா
எதிரொலி (புதிய பிரதி)
From 24th
Future Women

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
''காதல் தியாகத்திலேதான் முழு வடிவம்பெறுகிறது!'' பார்ப்பதற்கு மனங்கவரும் வண்ணக் காட்சிகளும், கேட்பதற்கு இனிய பாடல்களும், உணர்வதற்கு கருத்தாழம் நிறைந்த உரையாடல்களும், மொத்தத்தில் அற்புதமான திரைக் காவியந்தான் நட்சத்திரம்!
இப்பொழுது 4வது வாரமாக வெற்றிநடைபோடுகிறது
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் பட்டினசபை எல்லைக்குள் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கையில், 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஆலடிச் சந்தி, வே. சி. கந்தையா, (தேனீர்க் கடை) அவர்களிடம் விபரங்களை அறியவும். 2867

அறுபது 45 கலன் வெற்றுறம் (Sixty 45gls capacity empty barrels) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும், சுகந்தன் வியாபார நிலையம், கண்டி வீதி, கைதடி. 2926

பெட்டகம் சுற்றளவு 2×4×4½அடி, தனி வேப்பம் பலகையாலானது, கருங்காலி வேலைப்பாடுகள் அமைந்தது, 3 லாச்சிகளுடன் விற்பனைக்கு உண்டு. சர்மா ஐயர், பிள்ளையார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், தெற்கு. 2927

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் பிரதான வீதியில் 4 பரப்பு 5குளி காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சார தண்ணீர் வசதியுண்டு. தொடர்பு: 18 சப்பல் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 620 2932

நீர்வேலி வடக்கில் நிலப்பரப்ப 4½ தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சபாரத்தினம், இராசபாதை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி, 2939

அரியாலை கிழக்கு நாவலடியில் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ப. திருநீலகண்டன், 76, இலந்தகுளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம். 2942

## விற்பனைக்கு

A 40 கார் விற்பனைக்கு அல்லது ஜீப்பிற்கு மாற்றுவதற்குண்டு. தினமும் 3 மணிக்குப் பின் மாத்தற பேக்கவுஸ் சுன்னாகத்தில் பார்வையிடலாம். 2779

## தேவை

பெண்களின் உடைகள் வெட்டித் தைக்க அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. விண்ணப்பிக்கவும், வசந்தா வஸ்திராலயம், 20, மக்கள் நவீனசந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம். 2910

பகுதி நேரத் தொழில் நுட்டப் பயிற்சி நெறி உடைகள் தயாரித்தல் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்மேற்படி பயிற்சி நெறிக்குத் தகுதி வாய்ந்த போதனாசிரியர்கள் தேவை. தகுதியையும் அனுபவத்தையும் குறிப்பிட்டு 3-5-82க்கு முன்னர் அதிபர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குக. 2923

## வகுப்பு

3-5-82 டெலிவிஷன் வகுப்புகள் செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கட்கு: AUTO COOL ENGINEERS, (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம். 2943

## இலவசம்

பழைய சுண்ணும்புச்சுவரில் உடைத்த மக்கி இலவசமாக வழங்கப்படும். பொழிந்த வெள்ளை முருகக்கல் குறைந்த விலையிற்பெறலாம். விபரங்களுக்கு 45, சிவகுருநாதர் வீதி யாழ்ப்பாணம். 2941

## பயிற்சி

றேடியோ — டெலிவிசன். வெல்டிங் மூன்று மாத டிப்ளோமாபயிற்சி வகுப்புக்கள் (சிறந்த செய்முறைப் பயிற்சியுடன்) ஆரம்பம் 26-4-82 இருபாலாரும் சேரலாம் நேரில் வரவும். நாஷனல் அக்கடமி மொய்சாக்கட்டிடம் (விவேகானந்த அச்சகம் முன்பாக) 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2940

## 3-ம் ஆண்டு நினைவாஞ்சலி



**கமலாதேவி வித்தியானந்தன்**

அன்புடன் அஞ்சலி செலுத்துவோர்

அன்புக்கணவன்:
சு. வித்தியானந்தன்
அன்புப்பிள்ளைகள்:
அருள்நம்பி
மகிழ்நங்கை
அன்புச்செல்வி
இன்பச்செல்வன்
சிவமைந்தன்

தமிழகம்,
வீமன்காமம்,
தெல்லிப்பழை,
23-4-1982. 2875

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் நல்லூர், செட்டித்தெரு ஒழுங்கை இலக்கம் 21ஐச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் செட்டியார் மறுபெயர் இராமலிங்கம் சோமசுந்தரம் அவர்களின் மரணசாதனச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்

வழ. இல: ரி/3659

இராமலிங்கம் சோமசுந்தரம் கைம்பெண் இராசநாயகி மறுபெயர் ரத்தி (21) 51/10 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு வைகாசி மாதம் 28ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண் பங்குனி மாதம் 5ந் திகதி.

மன்றின் சட்டளைப்படி,
(ஒப்பம்)
தா. குலஞானம்,
பதிவாளர்.

வரைதல்
(ஒப்பம்)
அ. உமாசங்கர்,
மனுதாரின் சட்டத்தரணி. 2894

## 50 வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

சமூகசேவைப் பகுதியிலுள்ள வயோதிபர்களுக்கும், சிறுவர்களுக்கும் நன்கொடை கொடுப்பனவு50சதவீதத்தால் அதிகரிக்கப்படவிருக்கிறது. இதன்மூலம் அரசுக்கு 2 கோடியே 10 லட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்படும்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம்நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற கொழும்புத்துறை கதிரித்தம்பி சுவாமிநாதன் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

— மரணமெய்தியவர்

சரவணமுத்து செல்வராசா 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3583

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காகமேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம்ஆண்டு சித்திரைமாதம் 30-ம் நாளன்று முற்பகல் 9மணிச்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கோ. ஆ. கந்தசாமி
பதில் பதிவாளர்

1982-ம்ஆண்டுசித்திரைமாதம் 16-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 2937

## கோரிக்கை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரம் உரையாற்றுகையில் தற்போது சிங்கப்பூருக்கு மாத்திரம் ஏற்றுமதி செய்யப்படும் கடலட்டைகளை ஹொங்கொங், ஜப்பான் ஆகியநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய சங்கம் முயற்சித்து வருவதாக தெரிவித்தார். சங்க உத்தியோகத்தர் திரு. ஜோர்ச், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ஜெயகாந்தன் ஆகியோர் உட்பட மற்றும்பலர் உரையாற்றினர்கள். திரு. நா. இரத்தினசிங்கம் நன்றியுரை நிகழ்த்தினர். சங்கத்திற்கு ஆகக்கூடிய தொகைக்கு கடலட்டைகளை விநியோகித்த சங்க உறுப்பினர் திரு. மு. இராசையாவுக்கு ஊக்குவிப்பு நிதியிலிருந்து 80 ஆயிரம்ரூபாவும், கேடயம் ஒன்றும் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஊக்குவிப்பு நிதி கிடைக்கப்பெற்றவர்களுக்கானகாசோலைகளை கையளித்தார்.

## மத்தளத்தின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றேன். இங்கு நடைபெற்ற விழாவில் நானோ அமிர்தலிங்கமோ, துரைரத்தினமோ கலந்துகொள்ளாவிட்டால் இராசலிங்கத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள் என்றும் கூறுவார்கள் என்றே நாம் எப்படியும் இந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று வந்தோம்.

"76ல் ஏற்படுத்தப்பட்ட ஒற்றுமையைக் குலைக்க வேண்டாம் என்பதையே நாம் கேட்டுக்கொள்கின்றோம். சிங்களத் தலைவர்கள் எம்மை மதிப்பதற்குக் காரணம் எம்மிடையே உள்ள ஒற்றுமையே. இந்த ஒற்றுமைதான் தமிழ் இனத்திற்கு சுபீட்சத்தை அளிக்கும். சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றும் ஒற்றுமையை ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்ந்து செயற்பட வேண்டும்." என்றார் மற்றும் பலர் பேசினர்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற கதிரன் தேவராசாவின் மரணச்சொத்து நிருவாக விடயமாக மரணமெய்தியவர்

1. மருதர் வைரமுத்துவும் பெண்
2. செல்லமுத்துவும், உடுவில் றோட், மானிப்பாய்

வழக்கு இல. மனுதாரர்கள்

T/3653 எதிராக

1. கதிரன் தருமலிங்கம், உடுவில் றோட், மானிப்பாய்.
2. பூவிலிங்கம் பெண் முத்துக்கண், மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.
3. கந்தமுத்து சிவராசா, 416, சென்றல் றோட், திருகோணமலை.
4. சிவராசா பெண் கருணாதேவி, மானிப்பாய் வட கிழக்கு, மானிப்பாய்.
5. பசுவலிங்கம் பெண் நாகமலர் மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.
6. கந்தமுத்து புஸ்பராசா ,, ,,
7. ,, சுந்தரலிங்கம் 358, கோட்றோட், திருகோணமலை
8. ,, மல்லிகாதேவி ,, ,,
9. ,, சிறிகந்தராசா (தற்போது சிங்கப்பூர்) 416, சென்றல் றோட், திருகோணமலை,
10. சிவஞானம் பெண் சந்திராதேவி, புதுத்தோட்டம், தெல்லிப்பளை.
11. செல்வரத்தினம் பெண் பத்மாதேவி, மானிப்பாய், வடகிழக்கு, மானிப்பாய்.

பிரதிவாதிகள்

இவ்விடயம் 1982ம் ஆண்டு தை மாதம் 25ந் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. பாலகிட்டிணர் முகதாவில் சட்டத்தரணி திரு. சோ சிவஞானத்தால் ஆசரிக்கப்பட்டு இவ்வழக்கில் அணைக்கப்பட்ட மனுதாரர்களின் மனு, சத்தியக்கூறு ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள கூற்றக்களை பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்ததன் பேரில்,

மேற்கூறிய பிரதிவாதிகளோ அல்லது அக்கறையுள்ள ஆள் எவரோ இந் நீதிமன்றில் 1982-ம் ஆண்டு வைகாசி மாதம் 14ந் திகதி காலை 9 மணிக்கு அதற்கு முன்னர் எதிராக காரணங்காட்டினாலன்றி மனுதாரர்கள் குறித்த கதிரன் தேவராசாவின் மரணச்சொத்து நிருவாகத்தத்துவம் பத்திரம் பெறுவதற்கு உரிமையுடையவர்களென்றும் அவ்வாறே நிருவாகத்தத்துவ மனுதாரர்களுக்கு வழங்கப்படுமென்றும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

தயாரித்தவர்:
சோ. சிவஞானம்
மனுதாரர்களின் சட்டத்தரணி
1982ம் ஆண்டு
தை மாதம் 25 ந் திகதி.

எஸ். ஆனந்தகுமாரசாமி
யாழ். மாவட் நீதிபதி
2929

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நிறுவனத்திற்கு 40 வயதிற்கு மேற்பட்ட அனுபவமுள்ள குடும்பப் பொறுப்பற்ற கார் சாரதி தேவை. அனுபவம் நற்சாட்சிப்பத்திரம் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். சாரதி தேவை. C/o ஈழநாடு லிமிட்டெட், த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

## உரும்பிராய் விளையாட்டுக் கழகம்

நடாத்தும் செல்வர்கள் ஜெயம், சத்திக்குமார் ஆகியோரின் ஞாபகார்த்த 20 ஓவர்கள், ஆறு பேர்கள் கொண்ட 5 ஓவர்கள் மென்பந்து கிரிக்கற் சுற்றுப் போட்டி

விண்ணப்ப முடிவு திகதி 30-4-1982

தொடர்புகளுக்கு:

ரஞ்சன் ஹன்டி
ஹன்டி கொட்
உரும்பிராய்.

2958

## காணி விற்பனைக்கு

தோட்டச் செய்கைக்கு உகந்த காணியும் ஒரே வரிசையில் வீடுகட்டக்கூடிய, ஒவ்வொன்றும் நான்கு பரப்புகொண்ட 5 துண்டுக்காணிகள் இவையாவும் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி, 4-ம்கட்டையிலுள்ள கோப்பாய் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு மேற்குப்பக்கத்தில் உண்டு.

விலை மற்றும் விபரங்களுக்கு:

W. முத்துக்குமாரசுவாமி பிரக்கிராசியார் "கல்வளவு" கோப்பாய், அல்லது
R. சின்னத்துரை "சாந்தம்" இருபாலை, அல்லது,
M. கனகராசா 200 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

2924

# ஆனையிறவு ரயில்நிலைய அதிபர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

மகேந்திரனும் மாலினியும் சந்தோஷமாகவே இருந்தார்கள். மாலினி முகத்தில் வித்தியாசம் எதுவும் தென்படவில்லை''

ஆனையிறவு புகையிரதநிலைய அதிபர் த. நாகநாதன், மாலினி மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

புகையிரத நிலைய அதிபர் நாகநாதன் மேலும் கூறியதாவது: சிவகுமாரன், மகேந்திரன் விடுதிக்கு வந்துபோவது வழக்கம். சிநேகிதர்மாதிரி பழகுவார்கள். அவர்கள் பழகும் நிலையிலிருந்து பிழையாக நடக்கிறார்கள் என்று நான் கருதவில்லை.

''மகேந்திரனையும், மாலினியையும் எனக்குத்தெரியும் வீட்டிற்குப்போவதுண்டு. சிவகுமாரையும் தெரியும் 14ம் திகதி நண்பகல் நான் தனிய, மகேந்திரன் வீட்டுக்கு 12–30 மணிக்குப் போனேன். மகேந்திரன் மனைவி, பிள்ளைகள்இருந்தனர். இரவு 8–40 மணிக்கு மகேந்திரன், மனைவி மாலினி, சிவகுமார் என் வீட்டிற்குவந்தனர். இரவு புகையிரதம் வந்தது மகேந்திரன் ஏறினர். மாலினி, சிவகுமார், பிள்ளையைக் கண்டேன், மாலினியில் மாற்றம் இல்லை. சிரித்தபடி சென்றார்.''

## மாலினி மரணவிசாரணை

# 'தான்ஒன்றும்குடிக்கவில்லை என்றுமாலினி கூறினர்'

## சிவகுமார் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

''அதிகாலை நான் மாலினியின் அறைக்குச் சென்றபோது மாலினி ஒருகையை கட்டிலில் ஊன்றியபடி படுத்திருந்தார். கதவுப்பக்கம்பார்த்துக் கொண்டிருந்தார். மாலினி இருந்த இடத்தில் மருந்து வாடை போல ஒருவாடைவீசியது. என்னவும் குடித்தீரா? என்று கேட்டேன். 'நான் ஒன்றும் குடிக்கவில்லை. பயப்படாதீர்கள் எனக்கு ஒன்றும் செய்யாது', என்றார். மயங்கிற மாதிரி இருந்ததால் எழும்பும் என்று கூறி கையால் தட்டி எழும்பினேன்.'

மாலினி மகேந்திரன் (24 வயது) மரணவிசாரணையில் சாட்சியமளித்த பிராந்திய முகாமையாளர் செல்லத்துரை சிவகுமார் (31 வயது) மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. யோகநாதன் முன்னிலையில் 4–வது தினமாக நேற்றுமரண விசாரணை நடைபெற்றது.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன விடுதியில் மர்மமான முறையில் மரணமான உப்புக் கூட்டுத்தாபனக் கணக்காளர் மகேந்திரனின் மனைவி மாலினியின் மரணவிசாரணை யாழ். நீதிமன்றத்தில் நடந்துவருகிறது.

இறந்த திருமதி மாலினி மகேந்திரனின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானர். சாட்சியமளித்த சிவகுமார் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். தவராசா, எஸ். சிவபாதசுந்தரம், எஸ். கனகசபாபதி ஆகியோர் ஆஜராகினர்.

விசாரணையைப் பார்க்கப் பெண்கள் உட்பட ஏராளமானேர் நீதிமன்றத்தில் கூடியிருந்தனர். (க)

மிகவும் குறைந்த
வி சே ட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கினென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன்
மற்றும் ※ மத்திய கிழக்கு ※ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
※ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கினென்ஸ் ட்ரவல்
சேவிஸ்(சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த: பெ. எண். 92, தொலைபேசி:8154

## பரிசளிப்பு

[சுழிபுரம்]

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கவுள்ளார். கல்லூரி அதிபர் திரு. ச. அருணாசலம் விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

## அமைச்சர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காத்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தின் கமிட்டி அறையில் நேற்றுக் காலை கருத்தரங்கு ஆய்வுரைகளை ஆரம்பித்து வைத்த அமைச்சர் இராசதுரை பேசுகையில். ''மகாநாட்டு ஒழுங்குகளில் சில தவறுகள் நடந்திருப்பதாக அறிகிறேன். பிரயாணத்திலும் அசௌகரியங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிந்தேன். இதற்காகப் பெரிதும் வருந்துகிறேன் இப்படியான தவறுகள் இனிமேல் நடக்கமாட்டாது'' என்று தெரிவித்தார்.

## சிவகுமார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுதாபன சிற்றூழியர் டொன் வின்சன்ட்போல், கிளிநொச்சி டாக்டர் க. தணிகாசலம் ஆகியோர் கடந்த4தினங்களாக சாட்சியமளித்தனர்.

இன்று காலை யாழ். நீதிமன்றத்தில் விசாரணை தொடர்ந்து நடைபெறும். (க)

## மாநாடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

''ஆசியாவின் முத்தாக விளங்கும் இலங்கையில் உலக இந்துமாநாடு இடம் பெறுவது இங்கு வாழும் மக்களுக்கு பெருமை தேடித்தந்துள்ளது. பௌத்தசமயம், இந்து சமயம் போன்ற சமயங்களெல்லாம் ஆசியாவிலே தான் தோன்றியது.

''ஐந்து பாடல்பெற்ற ஸ்தலங்களில் நான்கு இலங்கையில் உள்ளது. அவை முனீஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், கோணேஸ்வரம் ஆகியனவாகும்'' என்றார்.

நேற்றைய மாநாட்டில் பல உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஆராய்ச்சிக்கட்டுரைகள சமர்ப்பித்திருந்தனர், [வெ]

## ஸ்ரீகாமாட்சி...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாளைம் பூஜிக்கும் அற்புதக் காட்சி அழகு மயமானது.

சித்திரத்தேரிலே சிறப்பாக பவனிவரும் சிங்காரக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். விநாயகர் சுப்பிரமணியர் சமேதராக ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை எழுந்தருளி தொழுமடியார் வினைதீர்த்து அருள் பாலிக்கும் அழகேதனி.

அம்பிகை அடியார்கள் அனைவருமஅவளைதரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றும்வார்களாக.

வண்ணை நகர் வளரும்
காமாக்ஷித்தாய்
முன்னை வினை தீர்க்கும்
பராசக்தி
கண்ணின் மணியெனக்
காத்து ரட்சிக்கும்
மண்ணிற்பெருந்தெய்வம்
அவள்
விண்ணிலிரவியெனப் பிர
காசிக்கும் தோற்றம்
வண்ணையில் வளரும்
அன்ன பூரணி
கண்ணையிமை காப்பது
போல்காப்பாற்றியருள்வாள்
மண்ணில் வேறுளதோ
காமாக்ஷி உனைப்போல்.

## வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரமும், துணிவும், விடாமுயற்சியும் எமது மக்களுக்கு மிகவும் அவசியமானது. எமது இளைஞர்கள் அரசியல் புகலிடம் தேடி அந்த நாட்டுக்குச் சென்றபோது அவர்களுக்குப் புகலிடமளித்து வாழ்வு கொடுத்திருப்பது எமக்கு மகிழ்வைத் தருகிறது. எமது இன மக்கள் இங்கு பலவித இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் எமது பாரம்பரியமான நூலகம் எரிக்கப்பட்டுவிட்டது. இந்நூலகத்தைக் கட்டியெழுப்புவதற்கு மேற்கு ஜெர்மன் அரசு உதவுமென்று நம்புகின்றோம்'' என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் ''நேற்று சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு வந்த ஆயுதப்படையினர் பாதைகளை வழிமறித்து அப்பகுதிகளில் அநாவசியமான முறையில் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தனர். பல அப்பாவி இளைஞர்கள் இம்சைப் படுத்தப்பட்டனர். இந்த நிகழ்வுகள் இப்பகுதியில் இடம்பெறும் ஆயுதப்படையினரின் அத்துமீறல்களைத் தெளிவாகக் காட்டுகிறது. இன்று வருகைதந்திருக்கும் தூதுவர், மிகவும் அன்பும், பாசமும் உள்ளவர். அவருடன் நான் பழகும்போது எனது உறவினரைப்போலவே இருப்பேன். அவருக்கு எமது மக்களின் பிரச்னைகள் நன்கு தெரியும்'' என்றார்.

யாழ்ப்பாண எம். பி. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் 'மேற்கு ஜேர்மன் அரசு இலங்கைச்கு வழங்கும் உதவிகளில் ஒரு சிறுதொகைகூட வடபகுதிக்கு செலவு செய்யப்படுவதில்லை என்றும் எமது மக்கள் இந்த நாட்டில் பல தொல்லைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் கூறினர். [கெ]

## மாலினி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துடிப்பு. மணம் என்பவற்றைக் கொண்டு நஞ்சு அருந்தியதென முடிவு செய்தேன்.'

கிளிநொச்சி டாக்டர் க. தணிகாசலம், மாலினி மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

டாக்டர் தணிகாசலம் மேலும் கூறியதாவது:

15–ம் திகதி அதிகாலை 5 மணிக்கு மாலினியைக் கொண்டு வந்தனர். அவரை 2 பேர் தூக்கிவந்தனர். மாலினிக்கு நடுக்கமாக இருப்பதாகவும் அவர் தேங்காய்ப்பால் குடிப்பதற்கு தரும்படி கேட்டதாகவும் அவருக்குவருத்தமாக இருப்பதாகவும் சிவகுமார் கூறினர்.

''தேங்காய்ப்பால் கொடுத்ததா? என்று நான் கேட்கவில்லை. நான் சிவகுமாரைக் கேட்டபோது அவர் நஞ்சு அருந்தியிருக்கலாம் என்று கூறி ஒரு போத்தலை எடுத்துக்காட்டினர். அது 'தமரோன்' போத்தல் போத்தலில் வாடை வீசியது. மாலினியிடமும் அந்த வாடையே வீசியது. தேங்காய்ப்பால் மணம் வீசவில்லை. அதிகாலை 2 மணிக்கு மாலினி சுகமாக இருந்தாரென சிவகுமார் கூறினர். ஒகனோ பொஸ்பரஸ் என்ற கிருமிநாசினியான படியால் தகுந்த சிகிச்சை அளித்தேன் வயிறுகழுவ மருந்து கொடுத்தேன். அந்நேரத்தில் அவர் ஒன்றும் உட்கொள்ளக் கூடியநிலையில் இல்லை. [க]

விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்
பரிசளிப்பு விழாவும்
தாபகர்தின விழாவும்
மேற்படி விழா 23-4-82 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.
பிரதம விருந்தினர்:
மாண்புமிகு திரு. அ. அமிர்தலிங்கம்
அவர்கள்
(தேசியப் பேரவை எதிர்க்கட்சி முதல்வர்)
பரிசில் வழங்கல்:
திருமதி ம. அமிர்தலிங்கம் அவர்கள்
திரு. க. சிவநாதன் அவர்கள்
(கல்விப்பணிப்பாளர்)
தாபகர் நினைவுப் பேருரை வழங்குவார்
பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
அதிபர்
விக்ரோறியாக் கல்லூரி. (2949)

விற்பனைக்கு
சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
Single Pashe மோட்டர் வகைகள்
½ – H. P. 2850 R. P. M.
1 – H. P. 2850 R. P. M.
1.5 – H. P. 2850 R. P. M.
Thrae Pashe மோட்டர் வகைகள்
2 – H. P. to 30 H. P.
(R. P. M. – 750, 960, 1450)
கையிருப்பில் உண்டு.
இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்
கே. ஆர். சிவலோகநாதன் அன் கோ.
6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(2921) போன்:– 8289

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 603ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper, the General P.O. Sri Lanka. Regd. Q. B. 100836/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8186.